# RECORD OF DEPOSITION OF WITNESS

## IN THE COURT OF DISTRICT MUNSIF UTHANGARAI
## KRISHNAGIRI DISTRICT

| | | | | | |
|---|---|---|---|---|---|
| **Case No.** | **:** | O.S.No. 58/2018 | **CNR No.** | **:** | TNKI13-000065-2018 |
| **Name** | **:** | கமல்நாதன் | **Father's Name** | **:** | சண்முகம் |
| **Witness for** | **:** | Plaintiff | **Calling** | **:** | PW2 |
| **Age** | **:** | 60 | **Village** | **:** | எ. ரெட்டிப்பட்டி |
| **Taluk** | **:** | ஊத்தங்கரை | **District** | **:** | கிருஷ்ணகிரி |
| **Start Time** | **:** | 12:55 PM | **End Time** | **:** | 1:10PM |

Solemnly affirmed in accordance with the provisions of the Oaths Act, 1969 (Central Act 44 of 1969) on 18.07.2024 administered by Thiru. G. Amar Anand, B.A.LL.B (Hons), LL.M, District Munsif, Uthangarai.

**வாதி தரப்பு முதல் விசாரணை:**

நான் வழக்கிற்கு 3ம் தரப்பினர் ஆவேன். வாதி தரப்பு சாட்சியாக முன்னிலையாகி நிரூபண பிரமாணப்பத்திரம் தாக்கல் செய்கிறேன். நான் தாக்கல் செய்துள்ள இந்த நிரூபண பிரமாணப்பத்திரத்தில் உள்ள அனைத்து சங்கதிகளும் எனக்கு தெரியும். அவை சரியாக இருந்ததால் நான் அனைத்து பக்கங்களிலும் கையொப்பம் செய்தேன். (ஆவணங்கள் எதுவும் குறியீடு செய்யப்படவில்லை.

**பிரதிவாதி தரப்பில் குறுக்கு விசாரணை**

(1) வாதி எனக்கு உறவினறா என்றால் தூரத்து சொந்தம் ஒரே ஊர் காரர்கர்கள் ஆவோம். இந்த வழக்கில் எனக்கு நீதிமன்றத்தில் இருந்து அழைப்பாணை வந்ததா என்றால் வந்தது. தற்போது அதை கொண்டுவரவில்லை. அழைப்பாணையில் என்ன எழுதப்பட்டிருந்தது என்றால் கொடுத்தல் வாங்கல் சம்பந்தமாக இந்த வழக்கில் சாட்சியம் அளிக்க ஆஜராக சொல்லி இருந்தது. அழைப்பாணையை பெற்று நான்

நேராக சாட்சியம் அளிக்க வந்துள்ளேனா என்றால் இல்லை வழக்கறிஞர் அலுவலகம் சென்று பிரமாணபத்திரம் தட்டச்சு செய்து எடுத்து வந்து தாக்கல் செய்துள்ளேனன். வாதி கொடுத்தல் வாங்கல் தொழில் செய்து வருகிறாரா என்றால் இல்லை. வாதி இது போன்று மற்ற நபர்களுக்கு கடன் கொடுத்து வாங்கியுள்ளாரா என்றால் பிரதிவாதிக்கு கொடுத்தது மட்டும் தான் எனக்கு தெரியும். வாதியின் மகன்கள் வட்டி தொழில் செய்து வருகிறார்களா என்றால் இல்லை. மணி வெளியூரில் வேலை பார்த்து வருகிறார், மற்றொருவர் உள்ளூரில் இருக்கிறார்.

(2) நான் கடனுறுதிசீட்டில் சாட்சி கையொப்பம் செய்தேனா என்றால் செய்தேன். கடனுறுதி சீட்டை எங்கள் முன்னிலையில் எழுதி கையொப்பம் செய்தாரா என்றால் இல்லை, பிரதிவாதி எழுதி எடுத்து வந்து கையொப்பம் மட்டும் எங்கள் முன்னிலையில் செய்தார். நாங்கள் எங்கிருந்தோம் என்றால் வாதியும், பிரதிவாதியும் வாதியின் வீட்டில் இருந்தார்கள், வழியில் சென்ற எங்களை அழைத்தார்கள், கடனுறுதி சீட்டை எழுதி வைத்திருந்தார்கள், பேசிக் கொண்டிருந்தார்கள் 1 ரூபாய் வட்டி பேசப்பட்டது. அது கடனுறுதி சீட்டில் எழுதப்பட்டிருந்தா என்றால் எழுதப்பட்டிருந்தது. எதற்காக கடன் கொடுத்தார் என்று தெரியுமா என்றால் தெரியாது, அது எழுதப்பட்டுள்ளதா என்றால் தெரியாது. நானும், ராஜசேகரும் சாட்சியாக கையொப்பம் செய்தோமா என்றால் ஆமாம்.

(3) கடனுறுதி சீட்டை எழுதியவர் என்று யாராவது கையொப்பம் செய்தார்களா என்றால் இல்லை. பணம் கொடுத்தவர் கடனுறுதி சீட்டில் கையொப்பம் செய்தாரா என்றால் இல்லை. வெள்ளை தாளில் எழுதப்பட்டதா அச்சு தாளில் எழுதப்பட்டதா என்றால் அச்சு செய்த பாண்டு

தாளில் எழுதப்பட்டது. நான் வாதி உடைய மனைவியின் சகோதரர் என்பதால் பொய்யாக சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல. மோசடியாக வாதி தயாரித்த கடனுறுதி சீட்டை வைத்து பொய் வழக்கு தாக்கல் செய்துள்ளார் என்றால் சரியல்ல. பிரதிவாதி பணம் வாங்கவில்லை அதற்காக எந்த கடனுறுதி சீட்டும் எழுதி தரவில்லை என்று சொன்னால் சரியல்ல.

<u>**குறுக்கு விசாரணை முடிவுற்றது.**</u>

Taken down by me in open Court, read over to the witness and acknowledged by him / her to be correct.

G AMAR ANAND
District Munsif
Digitally signed by G AMAR ANAND
Location: Uthangarai

District Munsif
Uthangarai